# ஆண்டின் 18வது ஞாயிறு

# திருவழிபாடு ஆண்டு - *B*

## *2021-08-01*

*(இன்றைய வாசகங்கள்:*

*விடுதலைப் பயண நூலிலிருந்து வாசகம் 16: 2-4,12-15,*

*திபா 78: 3,4b. 23-24. 25,54 ,*

*திருத்தூதர் பவுல் எபேசியருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 4: 17, 20-24,*

*யோவான் எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம் 6: 24-35)*

## திருப்பலி முன்னுரை

*பொதுக்காலத்தின் பதினெட்டாம் ஞாயிறு திருப்பலியை சிறப்பிக்க உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம். இன்றைய திருவழிபாடு நிலைவாழ்வுக்கான உணவைத் தேட நமக்கு அழைப்பு விடுக்கிறது. இயேசு செய்த அற்புதத்தால் அப்பங்களை வயிறார உண்ட மக்கள், மீண்டும் உணவைத் தேடி இயேசுவிடம் செல்கின்றனர். இயேசு அவர்க ளிடம், தானே வாழ்வு தரும் உணவு என்று எடுத்துரைக்கிறார். மனித உடல் எடுத்த இறைமகன் இயேசு, நற்கருணை வடிவில் தன்னையே நமக்கு உணவாகத் தருகிறார். நமது ஆன்மத் தேவைகளுக்காக நிலைவாழ்வு அளிக்கும் உணவாம் இயேசுவைத் தேடும் வரம் வேண்டி, இந்த திருப்பலியில் பங்கேற்போம்.*

## *விசுவாசிகள் மன்றாட்டுகள்:*

*விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.*

*பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

***வாழ்வு தருபவராம் இறைவா,***

*திருச்சபையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனை வரும் உமது மக்கள் மீது பரிவு கொள்ளும் நல்ல மேய்ப்பர்களாகவும், அவர்களின் தேவையறிந்து பணிபுரியும் சிறந்த தலைவர்களாகவும் செயல்பட துணைநிற்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.*

***இறைவன் தந்த உணவான இயேசு ஆண்டவரே, உம்மைப் போற்றுகிறோம்.***

*வாழ்வு தரும் உணவான உமது வார்த்தைகளையும், நிறைவு தரும் விருந்தான நற்கருணையையும், தந்தை இறைவனின் திருவுளத்தை நிறைவேற்றும் ஆர்வமாகிய உணவையும் எங்களுக்கு எப்போதும் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.*

***எம்மை அரவணைக்கும் எம் இறைவா!***

*இளையோர்கள் தாங்கள் விரும்பிய வாழ்வைத் தங்கள் எண்ணங்கள் போல் வாழாமல் கடவுளது சாயலாகப் படைக்கப்பட்ட புதிய மனிதர்களாக உண்மையான நீதியிலும், தூய்மையிலும் சிறப்புடன் வாழ்ந்திடத் தேவையான தூய ஆவியின் அருளைப் பொழிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.*

***நிலைவாழ்வு அளிப்பவராம் இறைவா,***

*நற்கருணை வழியாக உமது திருமகனை உணவாக உட்கொள்ளும் எங்கள் பங்குத் தந்தை, அருட்சகோதரிகள், பங்கு மக்கள் அனைவரும், நீர் விரும்பும் உண்மை, தூய்மை ஆகியவற்றின் நெறியில் நடந்து, நிலைவாழ்வைப் பெற்றுக்கொள்ள அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.*

***காலங்களைக் கடந்த எம் இறைவா!***

*உமது பிள்ளைகள் இளையோராகிய நாங்கள் "எமது தேவைகளில் முதன்மையான தேவை நீரே" என்று உணர்ந்து நாங்கள் முழுமையாக உம் கரம் பற்றிக் கொள்ளவும், நிலைவாழ்வுப் பெற்று உம்மை அடையவும், எதிர்காலம் கேள்விகுறியதாக இருக்கும் காலகட்டத்தில் உம் அருளால் அதனைச் சிறப்பாக வெற்றிக் கொள்ள இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

***பண்பாளரே எம் இறைவா!***

*நான் மட்டும் பகிர்வதால் என்ன செய்ய முடியும் என்ற எதிர்மறை எண்ணங்களிலிருந்து எம்மை விடுவித்துப் பகிர்வு மனப்பான்மை வளரவும், உம் திருமகன் இயேசுவைப்போல் பகிர்ந்துண்டு வாழும் அவரின் சிறந்த சீடர்களாக எம் அயலாருடன் இணைந்து வாழ்ந்திட வரம் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.*

www.tamilcatholicnews.com